






# குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா படைப்புகளில் நாட்டுப்பற்று



குழந்தைக் கவிஞர்-பணிச்செல்வர் - பி. வெங்கட்ராமன்

இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற குழந்தை இலக்கிய பணிபுரிந்த குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவின் காலம் - தமிழ் குழந்தை இலக்கிய வரலாற்றின் நற்காலம்; பொற்காலம் எனலாம்.

" ஏடுதூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார் "
என விரும்பிய அவர்
"நல்ல நல்ல சேவை
நாட்டுக்குத் தேவை
நாமிதை இன்றே
நாடுதல் நன்றே"

என தமது அற்புத கவிதைகளால் வளரும் பயிருக்கு நீரும் உரமும் ஊற்றியவர்; நல்லவைகளைப் போற்றியவர்.

இளம் பருவத்திலேயே நாட்டுப்பற்று நன்கு வளமாக ஊட்டப்பட வேண்டும் என பாடிய பாரதியார் - கவிமணி ஆகியோரைத் தொடர்ந்து குழந்தைக் கவிஞரும் தமது பாடல்களில் வலியுறுத்தினார்.

நாட்டு விடுதலை - காந்தீய நெறி - கொடி வணக்கம் - பெருமைமிக்க பாரதம் குறித்த இவரதுபல பாடல்கள் பெரிதும் குறிப்பிடத்தக்கவை.

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதுபோல் வள்ளியப்பா தேசப்பற்றும் செந்தமிழ்ப்பற்றும் கொண்ட காந்தியவாதி சு.சுதி. கதிரேசன் செட்டியார் (1875-1943) நிறுவிய காந்தி பாடசாலையில் தொடக்கக் கல்வி படிக்கையில் காந்திஜி பற்றியும், ராட்டையின் மகிமையையும் அறிந்துகொண்டார். உயர்நிலைப் பள்ளியில் கடியாபட்டி இராமச்சந்திரபுரம் ஸ்ரீபூமிஸ்வரஸ்வாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது தக்ளியில் நூல் நூற்பதிலும், கதராடை அணிவதிலும் ஆர்வம் கொண்டார்.

காந்தி மகான் வந்து வாழ்த்திய இப்பள்ளியில் குன்றக்குடி அடிகளார், கல்கி சதாசிவம்,பழனியப்பா பிரதாஸ் அதிபர் செ.மெ. பழனியப்ப

செட்டியார் ஆகியோர் கல்வி பயின்றுள்ளனர்.(இன்று இப்பள்ளி உலகப்பர் மேல்நிலைப்பள்ளி என்றழைக்கப்படுகிறது)

இப்பள்ளியில் படிக்கையில் வள்ளியப்பாவும் நண்பர்களும் "பாரதி வாலிபர் சங்கம்" தொடங்கி, அவர் மறைந்த செப் 11 அன்று பாரதி பாடல்களை பாடிய வண்ணம் பாரதி படத்தை ஊர்வலமாக நடத்தி வந்துள்ளதுடன், காந்தி ஜெயந்தி அன்று ஏழைகளுக்கு அன்னதானமும் செய்து வந்திருக்கின்றனர்.

"சுதந்திரம் பிறந்த கதை", "பாட்டிலே காந்தி கதை" "நேரு தந்த பொம்மை" கவிதை படைப்புகளும், "நேருவும் குழந்தைகளும்: கட்டுரை நூலும் மிகச் சிறந்த படைப்புகளாகும்.

நேருவைப்பற்றி எழுதுகையில் -

”அருமை நேரு பிறந்தது
அலகா பாத் நகரிலே
இளைஞர் நேரு படித்தது
இங்கி லாந்து நாட்டிலே
தீரர் நேரு வாழ்ந்தது
தில்லிநகரம் தன்னிலே
இன்று நேரு வாழ்வது
எங்கள் பிஞ்சு நெஞ்சிலே”

எனப் பாடியதுடன்

” மனித ருக்குள் மாணிக்கம்
மக்கள் போற்றும் தலைவராம்
புனித மான விடுதலை
பெற வுழைத்த ஜவஹராம்”

எனப் போற்றியதுடன் அவர் பிறந்த நாள் நவ.14 - குழந்தைகள் தினத்தில் ஆண்டுதோறும் குழந்தை எழுத்தாளர் சங்கம் மூலம் நூல்கள் வெளியிட்டு மகிழ்ந்தார்.

அன்னியர் வருகையும் அவர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து அறவழியில் போராடி வெற்றியும் விடுதலையும் பெற்றதை "சுதந்திரம் பிறந்த கதை" எனும் இவர் எழுதிய வரலாற்று கதைப் பாடலும், அண்ணலின் வாழ்க்கையை அருமையாக வடித்திட்ட இவரது "பாட்டிலே காந்தி கதை"யை பள்ளிகளில் பாடமாக வைக்க வேண்டியவை.

சுதந்திர தினத்தைப்பற்றி குழந்தைக் கவிஞர் குறிப்பிடுகையில் -

” வெள்ளை ஆட்சி முடிந்துபோன
வெற்றி நாளிதே -நாம்
மேன்மை மிக்க சுதந்தி ரத்தைப்
பெற்ற நாளிதே
சுதந்திரத்தின் பெருமை தன்னை
உணர்ந்து வாழுவோம் - மக்கள்
துயரம் யாகவும் துடைப்ப தற்கே
உறுதி பூணுவோம்.
இதயம் ஒன்றி இந்தியத் தாய் - நாம்

பெற்ற பிள்ளைகள்
இன்ப முற்று வாழுதற்கு
வழிகள் காணுவோம் ”
எனும் பாடல் நம்மையெல்லாம் பெரிதும் நெகிழ வைக்கிறது.
” நெற்றி வியர்வை நிலத்தில் விழ
நித்தம் உழைக்கும் உழவருமே
கட்டி யிருந்த கந்தலையே
கண்டனர் காந்தி மதுரையிலே
வாடிடும் உழவர் நிலைகண்டு
வருந்திய காந்தியும் அன்று முதல்
ஆடை குறைக்க முடிவு செய்தே
அணிந்தனர் நாலு முழவேட்டி
நித்தமும் கீதை படித்திடுவார்
நெஞ்சார பிராத்தனை செய்திடுவார்
புத்தரும் ஏசுவும் நபிகளுமே
போதித்த உண்மை எழுத்துரைப்பார் ”

என்று பாடிய வள்ளியப்பா காந்தியின் கதையை வருங்காலத்தவருக்கு தவறாது அறிந்து கொள்ள வேண்டும் என்று வடித்த அற்புத காவியம் - "பாட்டிலே காந்தி கதை" காந்தி மகான் கதையை வில்லுப்பாட்டாக அளித்த கொத்தமங்கலம் சுப்பு அவர்களே

"பள்ளைக் கலிதீர்க்க வந்த தெல்லாம் - நம்
பிள்ளைக ளாகவே வாழுதற்கு
வள்ளியப் பாஇன்று பாடிவைத்த - காந்தி
வள்ளல் கதைஒரு வாய்க்காலாம்"

என அற்புதமாக இதனைப் பாராட்டியுள்ளார்.

*கட்டுரை:*

*பி. வெங்கட்ராமன் அவர்கள் எழுதிய*
*“பிஆர்ஓ வின் டைரி ” நூலிலிருந்து*

*தகவல் : முனைவர் மா.தாமோதரகண்ணன்*